



டெல்டா மாவட்டங்களில் ஆய்வு மேற்கொள்ள சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தஞ்சையில் பொதுமக்கள், 100 நாள் வேலை திட்ட மகளிர் பணியாளர்கள் திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளித்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.6.2023) திருச்சிராப்பள்ளி மாவட்டம், வெள்ளனூரில் உள்ள நந்தியாறு வடிகாலில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் எம். பிரதீப் குமார் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.6.2023) திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆலங்குடியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரிபவர்களிடம் கலந்துரையாடி அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்டறிந்தார். உடன், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்தீப் சக்சேனா, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் எம். பிரதீப் குமார் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# தமிழ்நாட்டில் சிறப்பான ஆட்சி நடைபெறுகிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் 100 நாள் திட்டப் பணியாளர்கள் பாராட்டு!

திருச்சி, ஜூன் 11-

தமிழ்நாட்டில் சிறப்பான ஆட்சி நடைபெற்று வருவதாக, நூறு நாள் திட்டப்பணியாளர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி வருவதாக முதலமைச்சரிடம் அவர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர்.

டெல்டா மாவட்டங்களில் நடைபெற்று வரும்தூர்வாரும்பணிகளைஆய்வுசெய்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருச்சி மாவட்டம் செங்கையூரிலிருந்து இருதய புரத்துக்குச் சென்று கொண்டிருந்தார். அப்போது, ஆலங்குடி மகாஜனம் என்ற இடத்தில்,100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பெண்கள் பணியாற்றி கொண்டிருந்தனர்.

இதையடுத்து, காரிலிருந்து இறங்கிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அங்கு பணியாற்றி கொண்டிருந்த பெண்களிடம் கலந்துரையாடினார். தமிழ்நாட்டில் சிறப்பான ஆட்சி நடைபெற்று வருவதாக, நூறு நாள் திட்டப்பணியாளர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பாராட்டு தெரிவித்தனர். தேர்தல்நேரத்தில்கூறியதை நிறைவேற்றி வருவதாக முதலமைச்சரிடம் அவர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

# மதுரை மாவட்ட திட்டக் குழு உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள்!

## மாவட்டச் செயலாளர்கள் பி.மூர்த்தி - கோ.தளபதி - மு.மணிமாறன் அறிவிப்பு!

மதுரை மாவட்டத்தில் நடைபெற உள்ள மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளர்கள் பட்டியல் வருமாறு:

**மதுரை மாவட்டம்:**

**ஊரகப் பகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள்:**

1. சி.நேருபாண்டியன், 2. ஆர். வடிவேல் முருகன், 3. ஜி.இராஜராஜன், 4. முத்துப்பாண்டி ஜெயசீலன், 5.ஏ.டி.ஆர். தங்கம், 6. எஸ்.செல்வமணி, 7. ஆர். காசிமாயன், 8. டி.முத்துராமன்

**பேரூராட்சி / நகராட்சி / மதுரை மாநகராட்சி உறுப்பினர்கள்:**

1.பி. பொன்வளவன் (எ) ராசா, 2. எஸ்.வி. சுதன், 3. திருமதி அமுதாதவமணி, 4.எஸ்.செங்கிஸ்கான், 5. டி.கதிரவன், 6. சுவேதா சத்யன், 7. ரம்ஜான் பேகம், 8. எஸ்.என். சத்யபிரகாஷ், 9. குமரவேல், 10. தமிழ்ச் செல்வி

| அமைச்சர் பி.மூர்த்தி | கோ.தளபதி | மு.மணிமாறன் |
|---|---|---|
| செயலாளர், | செயலாளர், | செயலாளர், |
| மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. | மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. | மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. |

## புதுக்கோட்டை மாவட்டத்தில்

# நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் மரக்கன்றுகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நட்டார்!

புதுக்கோட்டை, ஜூன் 11-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகராட்சி, பெருமாள்பட்டியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவினை முன்னிட்டு, நெடுஞ்சாலைத்துறையின் சார்பில், மரக்கன்றுகளை, சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 08.06.2023 அன்று நட்டார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சி ரம்யா தலைமையில் நடைபெற்றது. பின்னர் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்ததாவது;

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவினை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறையின் மூலம் 5,00,000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியினை சென்னையில் தொடங்கி வைத்தார்கள்.

அதன்படி இன்றைய தினம் அறந்தாங்கி நகராட்சி, பெருமாள்பட்டியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவினை முன்னிட்டு, மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் அனைவரும் மரக்கன்றுகளை நட்டு, தமிழகத்தை பசுமை மாநிலமாக மாற்ற வேண்டும் என அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் இரா.ஆனந்த், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், உதவி கோட்டப் பொறியாளர் மோகன், அறந்தாங்கி நகராட்சி ஆணையர் லீனா சைமன், நகராட்சி பொறியாளர் தமிழ்செல்வி மற்றும் அலுவலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## நீலகிரி மாவட்டத்திற்கான

# திட்டக்குழு உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளர்கள் பட்டியல்!

## மாவட்ட செயலாளர் பா.மு.முபாரக் அறிவிப்பு!

நீலகிரி மாவட்டத்திற்கான திட்டக்குழு தேர்தல் எதிர்வரும் 23.6.2023 அன்று நடைபெற உள்ளது.

மேற்படி,தேர்தலில் கீழ்காணும் கழக தோழர்கள் ஊரக பகுதி மற்றும் நகர பகுதிகளுக்கான வேட்பாளர்களாக போட்டியிடுவார்கள் என்பதனை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஊரக பகுதிக்கான வேட்பாளர்கள்.**

| வ.எண். | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | வேட்பாளர்கள் பெயர் |
|---|---|---|
| 1 | மாவட்ட ஊராட்சி 3வது வார்டு உறுப்பினர் | பி.சசிகலா |
| 2 | மாவட்ட ஊராட்சி 4வது வார்டு உறுப்பினர் | கே.வனஜா |
| 3 | மாவட்ட ஊராட்சி 5வது வார்டு உறுப்பினர் | பி.ராஜன் |
| 4 | மாவட்ட ஊராட்சி 6வது வார்டு உறுப்பினர் | ஆர்.மீனா |

**நகர பகுதிக்கான வேட்பாளர்கள்.**

| வ.எண். | நகராட்சி/பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் | வேட்பாளர்கள் பெயர் |
|---|---|---|
| 1 | உதகை நகராட்சி 22வது வார்டு உறுப்பினர் | ஜே.ரவிகுமார் |
| 2 | உதகை நகராட்சி 12வது வார்டு உறுப்பினர் | எஸ்.ஜார்ஜ் |
| 3 | குன்னூர் நகராட்சி 2வது வார்டு உறுப்பினர் | எம்.ராமசாமி |
| 4 | கூடலூர் நகராட்சி 15வது வார்டு உறுப்பினர் | அ.இராஜேந்திரன் |
| 5 | உதகை நகராட்சி 18வது வார்டு உறுப்பினர் | கே.ஏ.முஸ்தபா |
| 6 | உதகை நகராட்சி 7வது வார்டு உறுப்பினர் | ஆர்.விசாலாட்சி |
| 7 | கீழ்குந்தா பேரூராட்சி 9வது வார்டு உறுப்பினர் | டி.கே.எஸ்.பாபு |

நீலகிரி மாவட்டத்திற்கான ஊரக மற்றும் நகர திட்டக்குழு உறுப்பினர்கள் பொறுப்பிற்கு போட்டியிடுவதற்காக நீலகிரி மாவட்ட கழகத்தின் சார்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ள மேற்கண்ட கழக வேட்பாளர்களை மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து வெற்றிபெற செய்திட அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன்.

**பா.மு.முபாரக்**

செயலாளர், நீலகிரி மாவட்ட தி.மு.க.





பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (09.06.2023) திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயில் மாடவீதி சுற்றி சிமெண்ட் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருவதை நேரில் சென்று ஆய்வு செய்து செய்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணை தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன், மாநில தடகள சங்க துணை தலைவர் மரு. எ.வ.வே.கம்பன். நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் பழனிவேல், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.




முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினையொட்டி ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் கள்ளிபட்டியில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், எ.பெருமாள்சாமி, எம். சிவபாலன், என்.ஆர்.நாகராஜ், ஜானகிராமசாமி, கே.பி.துரைராஜ், கே.சி.பி.கே.இளங்கோ, சிறுவலூர் எஸ்.எஸ்.வெள்ளியங்கிரி, சம்பத்குமார், ராஜசேகர், பவானி கே.சரவணன், புகழேந்தி உள்ளிட்ட மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.